**THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

07.10.2025

O.S. No. 66/2022

P.W. 2 திரு. ராஜகுமார்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்) -**

நான் யாருக்காக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் வில்லியம் கொம்பையனுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் சொல்ல வந்துள்ள வழக்கின் எண் தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் கிரய முன் ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் சாட்சி கையொப்பம் செய்த இந்த வழக்கு கிரய முன் ஒப்பந்தத்தில் வில்லியம் கொம்பையன் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். கிரய முன் ஒப்பந்த கால கட்டத்தில் அதில் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கு மனை பிரிவு அங்கீகாரம் கிடையாது என்றால் சரிதான். ஆனால் பஞ்சாயத்திலிருந்து அனுமதி வாங்கியிருந்தார்கள். அந்த NOC யையும் காட்டினார்கள். அந்த அனுமதி வாங்கிய பிறகும், அந்த கால கெடு 6 மாதத்திற்குள்ளோ, இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரையிலோ வாதி எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எப்போது கிரய ஆவணம் எழுதிகிறமோ அப்போது அந்த பணத்தை கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். தற்போது அந்த சொத்திற்கு உரிய மனை பிரிவு அங்கீகாரம் கிடையாது என்று சொன்னால் அது

தவறு. மனை பிரிவு அங்கீகாரம் கிடைத்த பிறகும் பிரதிவாதிகள் அந்த சொத்தை வாதிக்கு கிரயம் செய்யவில்லை என்ற நிலையில்தான் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேனா என்றால் ஆமாம். வாதி கொடுக்க வேண்டிய மீதித்தொகை கொடுக்காத காரணத்தினாலும், மனை பிரிவு அங்கீகாரம் கிடைக்காததாலும், ஒப்பந்தத்தில் கூறியுள்ள சொத்தை பிரதிவாதிகள், வாதிக்கு விற்பனை செய்ய முடியவில்லை என்றாலும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி மீதித்தொகையை கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் கிடையாது என்றால் சரியல்ல.